Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி௵ (1889) ஆவணி௴ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது — தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி௵ மாசி௴ ௩உ வெள்ளிக்கிழமை (15 FEB 1957) [இல-௪௨]

நாவலர் வழியில்

## திருவள்ளுவர் திருநாள்

### மாசி உத்திரத்தில் மிளிர வரும் நிகழ்ச்சிகள்

:0:

### இலங்கை வானொலியின் எழில் பெறும் அமைப்பு

தமிழ்நெறி தழைத்தோங்க அவதரித்த பெரியாராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களின் முறையைப் பின்பற்றி, திருவள்ளுவர் திருநாள் 17-2-57ல் மாசி உத்தர தினத்தில் பின்வருமாறு இலங்கை வானொலியில் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

நிகழ்ச்சி நிரல்

காலை 7-05 — 7-10 "திருவள்ளுவர் நற்சிந்தனை" என் மாணிக்க இடைக்காடர், வி. வி. எஸ்.

" 9-00 — 9-20 "சைவசமயப் பாடசாலையில் திருவள்ளுவரைப் பற்றி" வி. மயில்வாகனம் அவர்கள் கற்பிப்பார்கள்

" 11-30 — 12-00 சிறுவர்மலரின் திருவள்ளுவர்

நண்பகல் 12-00 — 12-30 தமிழ்த் தென்றலில் "வள்ளுவரின் காதலி"

" 1-00 — 1-30 "வள்ளுவரும் மகளிரும்" பேச்சு பூமணி இராசையா

"வள்ளுவர் புகழ்மாலை" விவரணச் சித்திரம்

மாலை 8-00 — 8-15 பேச்சு "வள்ளுவர்கண்ட அறம்" பண்டிதர் என். ஏகாம்பரம்

" 9-15 — 10-00 கதாப்பிரசங்கம் — "திருவள்ளுவர்" வி. எஸ். எஸ். மணி பாகவதர்.

## ஈழ நாட்டுக்கு ஓர் சைவ ஆதீனம்

### இன்றியமையாத உடன் தேவை

0—0

### காலதாமசமின்றி ஆரம்பித்தல் சாலவும் வேண்டப்படுவது

புராதன காலந்தொட்டு இந்துக்களிடையே சமய சம்பிரதாயக் குழாங்களை ஸ்தாபித்த சமயத் தலைவர்கள், அவைகட்கு அங்கமாகக் கல்வி நிலையங்களையும் நிறுவி அவைகளைப் பாதுகாத்து நடத்தத் தமது பரம்பரைக் குருமாரையும் உருப்படச் செய்து சென்றனர். தென்னிந்தியாவில் இம்முறையில் நடைபெறும் தாபனங்களில் சங்கமாச்சாரியார், மாதவச்சாரியார், இராமானுஜாச் சாரியார் என்போரால் அமைக்கப்பட்ட மடங்கள் விசேடமாகக் குறிப்பிடத்தக்கவை. இவைகள் பெரும்பான்மையும் பிராமண வகுப்பினரின் தேவைகளையே பூர்த்தி செய்து வருகின்றன. சைவத்தையும் தமிழையும் பாதுகாத்துப் பரிபாலித்து வரும் பெருமையைத் திருப்பனந்தாள் தருமபுரம், சூரியனார் கோயில், திருவாவடுதுறை திருவண்ணாமலை ஆதீனங்கள் உடையனவாய் விளங்கி வந்தன. இவைகளுட் சில இலக்கிய விலக்கணங்களையும் சமய சாத்திரங்களையும் முறையே திறம்படக் கற்றபேரறிஞர்களைக் கொண்ட கழகங்களாகவும் விளங்கிவந்தன. இந்த ஆதீனங்களிலும் ஏற்ற தகுதிகளுடையோருக்கே கல்வி கிடைக்கக் கூடியதாக விருந்தது. அறிவையும் ஆராய்ச்சியையும் நாடிய அநேகர்க்கு அங்கு இடங்கிடைத்திலது. சமய பக்தியும் ஒழுக்கமுமுடைய மாணவர்களே அங்கு உவந்து ஏற்றுக்கொள்ளப் பட்டனர்.

இலங்கை சுதந்திரத்தைப் பெற்று அரசியலிற் பல மாற்றங்களைப் பெற்ற பின்னர், இலங்கையில் வாழும் சைவ மக்களுக்கு மேற்படி ஆதீனங்கள் பயன்பட வியலாதாய் விட்டன. எங்கள் சமய வளர்ச்சி உரிய முறையில் விருத்தியடைய வேண்டின், இன்று நமக்கு ஏற்பட்டுள்ள பாரதூரமான நிலையைக் குறித்து நன்கு ஆலோசித்துத் தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் தெளிவாக எடுத்துக்கூறும் சைவசமய சாத்திரங்களை, ஊக்கமும் விசுவாசமுமுடைய மாணாக்கர்கட்கு நன்கு பயிற்றக் கூடிய முறையில இலங்கையில் ஓர் ஆதீனத்தை, வாய்ப்பான ஒரு மத்திய ஸ்தானத்தில் குன்றக்குடியடிகளார் போன்றவர்கள் நிலைநாட்ட முன்வருவார்களேயாயின், அது சைவமும் தமிழும் மறுமலர்ச்சியடைதற்கு மிக்க துணையாகவிருக்கும். இதில் கல்வி கற்றுத் தேர்ச்சியடைபவர்கள் இலங்கையில் சைவக் குருமார்களாகவும் சமயப் பிரசாரகர்களாகவும் காலத்தில் இடம் பெறக் கூடியவராவார்.

இன்று இலங்கையிலுள்ள சைவ சமூகத்தினர் இடையனையிழந்த ஆநிரைகள் போல் நிலைதளம்பித் தடுமாறுகின்றனர். சமயத் துறையில் அவர்களை வழிகாட்டிச் செல்ல, இன்று ஒரு நந்தி அல்லது ஒரு நந்தபாலன், அல்லது ஒரு கோபாலன் அவசியம் வேண்டும். திருக்கயிலாய பரம்பரை ஆதீனங்கள் இந்தியாவில் இருப்பதுபோல் இலங்கையிலுள்ள சைவர்களாகும் தமிழர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஓர் ஆதீனம் அவசியம் அமைக்கப்படவேண்டும். இப்படியாகவோர் ஆதீனம் ஏற்படின் இளைஞர்கள் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய முறையில், உயர்ந்த சமயக்கல்வியைக் கற்றுக்கொள்வதற்கும் போதிய வசதி ஏற்படுமன்றோ. இவர்கள் கலாசார சமூக முன்னேற்ற இயக்கங்களில் தலைவர்களாய் மக்களை இனிது வழி காட்டக் கூடியவர்களாவார்கள்.

பிற்காலத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் சைவ சமயத்தின் வளர்ச்சிக்காக மகத்தான தொண்டாற்றி அதை நல்வழிப் படுத்தியவர்களில் ஆறுமுக நாவலரவர்கள்புரிந்த கைம்மாறற்ற பணிகள் மிகவும் போற்றப்பட வேண்டியன. சைவத்துக்கும் தமிழுக்கும் அவர் செய்த பெரிய சேவைகள் என்றுந் தமிழ் மக்களால், பிரதானமாகச் சைவ சமூகத்தினரால் மறவாது நன்றியுடன் பாராட்டப்பட வேண்டியன. இவ்வாறான பெருமை வாய்ந்த தலைவரின் ஞாபகத்தை என்றும் நிலைபெறச் செய்தற்கு அவர் பேரைக் கொண்டு ஓர் ஆதீனத்தை அமைத்துச் சைவ சமயத்தை விருத்தி செய்வதிலும் மகத்தான வேறொரு கைங்கரியம் இல்லையென்பாம். அவ்வாதீனத்தில், குருமாராய் வர விரும்புவோர்க்கும், மற்றையோர்கட்கும் வகுப்புக்கள் ஏற்படுத்திக் கல்வி பயிற்றப்பட வேண்டும். ஆலயங்களில் நடக்கும் விழாக்களில் வாணங்கள், சதிர் ஆட்டங்கள் என்பன பொருட்டு அநாவசியமாக ஏற்படும் செலவுகளைக் குறைத்துப் பணத்தைச் சமய வளர்ச்சிக்கு உறுதுணையாகும் நற்பணிகளில் உபயோகிக்கலாம். பரம்பொருளாகும் சிவத்துக்கு வருணம், சாதி, குலம் என்ற பேதங்கள் கிடையா எல்லோரையும் தமது அருளைப் பாலித்து அவர் ஆண்டு கொண்ட

தொடர்ச்சி 6-ம் பக்கம்

அரசியல் அலை

## நாடெங்கும் எதிர்ப்பு இயக்கங்கள் நடைபெறும்வதுஎன்ன!

### பண்டாரநாயக ஆட்சிப் பண்பாடா?

### ஆற்றுமையை அனைவரும் அறிந்து விட்டனர்

சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம், வேலைநிறுத்தம், சிறைவாசம், உண்ணாவிரதம் என்றவகையிலே உள்ள அரசியல் ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ஒரேமுறையிலே இயங்குகின்ற பெருமை இலங்கைக்குரியதாய்விட்டது! அதுவும் அரசியல் ஞானியென்று அவனி முழுவதற்கும் தானே வாய்ப்பறை சாற்றி வந்த பிரதமர் பண்டாரநாயகவின் ஆட்சிக்கே யுரியதாகின்றது.

ஆயுள்வேதக் கல்லூரியில் அமளி, மட்டக்களப்பில் இராணுவ நடமாட்டம். மோட்டார் வண்டிகள் சட்டத்திற்கு அடங்காமல் ஓட்டம். இந்த விபரீதங்கள் எல்லாம் இலங்கையிலேதானுண்டு.

அடிக்கடி கறுப்புக் கொடி காட்டி உண்மையிலேயே கறுப்புத்தோற்றத்தைக் கொண்டதாய்விட்டது பண்டாரநாயகப் பண்பாட்டில் ஆளப்படும் ஈழம். இதற்கிடையில் விருந்தினரை வரவேற்பதில் மட்டில்லா மகிழ்ச்சி. சீனப் பிரதமர் வந்தார். செம்படையினரின் ஆதரவைப் பெற்றார். ஆனால் புத்த மதத்தவர்களின் புகழையும் பொன் கொடுத்துப் பற்றினர். இன்னுமொரு முறை சீனப் பிரதமர் இலங்கை வந்தால் அப்பொழுது இந்நாட்டுத் தேசாதிபதியும் புத்த உத்தமராய் வீற்றிருப்பதைக் காணக் கூடியதாயிருக்கும் புத்தத்துக்கும் பொதுவுடைமைக்கும் மெத்தப் பொருத்தம் போலும். இல்லையேல நாட்டில் எங்கும் எதிர்ப்பு இயக்கங்கள் தோன்றக் காரணமான பண்டாரநாயக ஆட்சியை இலங்கைப் பொதுவுடைமைக் கட்சி ஆதரிக்க வேண்டிய அவசியம் எங்கிருந்து வந்தது?

### ஆந்திராவில் இரும்பு

சிறிது காலத்துக்கு முன் ஆந்திரா மாகாணத்திற் பொற் சுரங்கம் கண்டு பிடிக்கப்பட்டது. அதன் பின்பு அசாம் மாகாணத்தில் எண்ணெய்க் கிணறு கண்டு பிடிக்கப்பட்டது. இப்பொழுது ஆந்திரா மாகாணத்தில் இரும்பு இருப்பிடங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனவாம். இங்கே பெறக்கூடிய இரும்பு பல நூற்றாண்டுகளுக்கே போதுமானவையாயிருக்குமென்று குறிப்பிடப்படுகின்றது.

திருச்சிற்றம்பலம்
வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். துர்முகி ஞு மாசி ௴ ௪ ௨ வெள்ளிக்கிழமை

## அமைச்சர்களின் ஆலோசனை

இனக்குரோதம், மொழிப்பிணக்கு, மதவிரோதம் முதலியவற்றை மக்கள் மனத்தில் எழுப்பிவிட்டு அரசியல் ஆதிக்கத்தைக் கைப்பற்றிய பண்டாரநாயக ஆட்சியாளர் நாடெங்கும் கிளர்ச்சி வளர்ந்த வண்ணமாயிருப்பதைக் கண்டபின்பு சமரச முடிபுகளுக்கு அடிகோலுவதற்காக ஒரு சமாதான மாநாடு கூடுவது நல்லதென ஆலோசனை செய்திருக்கின்றார்களாம். சனநாயக ஆட்சி முறையிலே சமரசப் பேச்சுக்கு எப்பொழுதும் இடமிருக்கின்றதென்பதை யார்தான் மறுப்பார்கள்? ஆனல் முதல் அமைச்சர் பண்டாரநாயக தமிழ் பேசும் மக்களுடன் கலந்தாலோசிக்க வேண்டிய அலுவல்கள் யாவை என்பதைப்பற்றி விளக்கமாக எடுத்துக்காட்டாது 'நியாயமான வகையிலே' தமிழ் மொழியைப் பயன்படுத்த அநுமதி அளிக்கப்படும் என்பதை அடிப்படையாகக்கொண்டு சில முடிபுகளுக்குச் சமரசமாகப் பேச்சு நிகழ்த்தலாமெனக் குறிப்பிட்டிருக்கின்றார். ஆகவே ஒற்றுமை உண்டாவதற்குரிய அறிகுறிகள் இந்த ஆலோசனையிற் காணப்படவில்லையென்றே நாம் கருதுகின்றோம்.

தமிழ்பேசும் இனம் மற்றையோரின் தயவைத்தாட்சண்ணியத்தை மன்றாடிக் கேட்கவில்லை. தங்கள் நாட்டிலே தங்கள் உரிமைகளைத் தாங்களாகப் பெற்றுக்கொள்ளும் கொள்கையையே தமிழ் பேசும் மக்கள் கொண்டிருக்கின்றனர். சனநாயகக்கொள்கை நீதியும் நியாயமும் பொருந்தியதாக நடைமுறையிலே நிகழ்வதற்கு மக்கள் அனைவரும் தங்கள் தங்கள் உரிமைகளை உரிய முறையிலே பெறுதலே அரசநெறியாகும். ஆகவே தனிச் சிங்கள ஆதிக்கம் என்ற கொடியை ஏற்றி ஏனைய இனங்களுக்குக் கொடுமையை நாட்டிவிடப் பலவேறு வகைகளிலே இதுவரை முயன்று வந்திருக்கும் பண்டாரநாயக ஆட்சியாளர் இத்தேசத்திலே அமைதி நிலவுவதற்குமூலாதாரமாக வேண்டப்படுவது வகுப்புவாதமற்ற அரசமுறையென்பதை அறிந்துவிடல் வேண்டும்.

தமிழ் பேசும் மக்களுக்குத் தங்கள் மொழியைச் சிற்சில இடங்களில், சந்தர்ப்பங்களில், அலுவல்களிற் பயன்படுத்தும் உரிமைதான் வேண்டும்; அவ்விதமாக ஒரு வசதியை அளித்துவிட்டால் அரசியல் எதிர்ப்பு தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை மேலும் இருக்கமாட்டாது. என்று பண்டாரநாயக மந்திரிசபையார் எண்ணிவிட்டார்கள்போலும். நோய் என்ன என்றும் எங்கு குடிகொண்டிருக்கின்றதென்றும் அதன் வரலாறென்னவென்றும் ஆராயாது வைத்தியர் சாதுரியமாகப் பேசி மனவூக்கம் கொடுத்து நிலைமையை மாற்றத் துணிவதுபோலத் தனிச்சிங்கள ஆட்சியாளர் சமரசப்பேச்சுமாநாட்டைக் கூட்டத் திட்டமிட்டிருப்பது வேடிக்கை விளையாட்டுப் போலத் தோற்றுகின்றது.

இந்நாட்டிலே எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க அரசியற் சட்டத்தை உண்டுபண்ணுவதே இப்பொழுது அத்தியாவசியமான காரியமாகும். உண்மையான சனநாயக ஆட்சியில் உரிமையிழந்தவர்கள் உரிமை இல்லாதவர்களாக மேலதிக உரிமையுள்ளவர்கள் என்ற வகையில் இருக்கமாட்டார்கள். அந்த அடிப்படைக் கொள்கையை மூலமாகக்கொண்டு சமரசம்பேசுவதற்கு ஆட்சியாளர் ஆயத்தமாக இருந்தால் தமிழ்பேசும் இனம் சமாதான முடிவுக்காக அவ்வித ஆலோசனைக் கூட்டங்களிற் பங்குபற்றித் தேசத்தொண்டாற்ற முன்வரும் என்பதற்கையமில்லை. அவ்வாறில்லையேல் உரியமுறையிலே உரிமைகளைப் பெறத் தமிழ்பேசும் இனம் இயங்கிக்கொண்டேயிருக்கும்.

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### ம. ஐ. மு. வாழ்க்கை!

காலியிலே பாடிகாவலர் அட்டுழியஞ் செய்தனர் வைத்தியசாலையில் என்று மந்திரியார் தகநாயக அந்தரப்படுகின்றார். விசாரணை வேண்டுகின்றார். திருக்கோணமலையிலே திங்கட்கிழமை இருவர் உயிரிழந்தனர் என்ற செய்தியை இந்த மந்திரியார் அறியவில்லைப்போலும்! அதைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்று வினவாது நிற்கும் திரு. தகநாயக வகுப்புவாதக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு சனநாயக ஆட்சி முறையை நடத்த முடியுமா?

### வல்லமை விலகுகின்றது!

சர்வவல்லமைக்கும் இருப்பிடமானதென்று வாயாடிக்கொண்டு ஆதிக்கத்தைக் கைப்பற்றிய ம. ஐ. மு. வர வர வல்லமையையிழந்து வருகின்றது மின்சார சக்தியையேயிழந்துவிடக்கூடிய பொருளாதார நெருக்கடியிற் பிடிபட்டுவிட்டது ம. ஐ. மு.

### அரிசி நிறை குறைகின்றதாம்!

ம. ஐ. மு. அரிசி மகத்தானது என்று வாய்ப்பறைசாற்றி வந்தகாலம் தானக மாறுகின்றது. கொழும்புமாநகரத் துறைமுகத்தில் இறங்கும் அரிசி அளவு மெல்ல மெல்லக் குறைகின்றதாம். அதைத் தடுக்க மந்திரியார் குணவர்த்தன அரசாங்கத்தை இறக்குமதி வேலையை ஏற்று நடத்த வேண்டுமென்று யோசனை கூறுகின்றாராம். தரங்குறைந்த அரிசியைத் தந்த பெருமை ம. ஐ. மு. வுக்கு, நிறை குறைந்த அரிசியைத் தரும் புகழும் ம. ஐ. மு வுக்கு.

## நாவலர் விரும்பிய திருப்பணி

—0—

### முத்தமிழ் விழாவில் உதவிக்கு வேண்டுகோள்

திருக்கேதீச்சரத்திருப்பணி நிதி உதவி பெறும்பொருட்டு கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் சேர் கந்தையா வைத்தியநாதன அவர்கள் தலைமையில் முத்தமிழ் விழா ஒன்று நடைபெற்றது.

தமது தலைமை உரையை நிகழ்த்தியபோது தமிழுக்காகவும் சைவத்திற்காகவும் தமது வாழ்வையே அர்ப்பணஞ் செய்தவர் நாவலர் பெருந்தகை பாடல்பெற்ற தலமாகிய திருக்கேதீச்சரம் பண்டைய மாண்புமிக்க நிலை மீண்டும் அடைய வேண்டுமென்று அவர் விரும்பிக் கனவு கண்டார். அவருடைய கனவை நனவாக்க வேண்டியது சைவமக்களின் கடனாகும். இச்சபையில் இப்பொழுது ஆயிரத்துக்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் மாத்திரம் இருக்கின்றனர். பத்தாயிரம் அங்கத்தவர்களை இச்சபை உடையதாயிருத்தல் வேண்டும என்று சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் கூறினர்.

## சிங்கள சிறி எதிர்ப்புக்கு அரசாங்க நடவடிக்கை

சட்டத்துறையினர் போக்குவரத்துமந்திரி ஆகியோருடன் முதல் மந்திரி ஸ்ரீ.பண்டாரநாயக சிங்கள சிறி எதிர்ப்பு இயக்கம் பற்றி ஆலோசித்து எதிர் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளாராம்.

யந்திர உந்து வண்டிகளிலுள்ள ஆங்கில எழுத்துக்களை மாற்றித் தமிழ் எழுத்துக்கள் பொறித்து ஓடுவோர்மீது வழக்குத் தொடரப்படும். குற்றவாளிக்குக் குற்றம் போடப்படும். போடப்பட்ட குற்றப்பணம் கொடுபடா விட்டால் எழுத்து மாற்றப்பட்ட யந்திர உந்துவண்டி உட்பட அசைவுள்ள எந்தப் பொருளும் விற்கப்படும் என்று கூறப்படுகின்றது.

# கந்தவனத்திற் சைவப் பாடசாலை

———=○———

ஸ்ரீ சிவபாதசுந்தரனாரின்

## பேர் பொருத்தமானது

———:0:———

### பெற்றோரும் பிற சைவமக்களும் உதவ வேண்டியதேவை

———○———

"கிறீஸ்து சமயிகள் பெரும்பாலும் தங்கள் சமய நூலைத் தாங்கள் கற்றும் பெருந் திரவியங்களைச் செலவழித்துப் பாடசாலைகளைத் தாபித்துப் பிறருக்குக் கற்பித்தும் தங்கள் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் யாவருக்கும் போதித்தும் வருகிறபடியினலே அவர்கள் சமயம் எத்தேசத்திலும் வளர்ந்தோங்குகின்றது. நம்முடைய சைவ சமயிகள் சைவ நூல்களைக் கல்லாமையினலும் எங்கேயாயினும் சிலர் கற்ருலும், அவர்கள் பிறருக்குக் கற்பித்தலும் யாவரும் எளிதில் அறிந்து உய்யும்படி சமயாசாரங்களைப் போதித்தலும் இல்லாமையாலும் நமது சற்சமயமாகிய சைவசமயம் வளர்ச்சியின்றி வரவரக் குன்றுகிறது. ஆகலால நமது தமிழ் நாடெங்கும் பாடசாலைகளைத் தாபித்துப் பிள்ளைகளுக்குச் சமய நூல்களையும், அவைகளுக்கு வேண்டும் கருவி நூலகளையும் "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியும்" எ-ம் "வரியார் இருமையறியார்" எ-ம். திருக்கோவையாரில் அருளிச் செய்தபடி இம்மை மறுமைப் பயன்களுக்குத் துணைக்காரணமாய் உள்ள பொருளை ஈட்டுதற்கு வேண்டும் இலௌகிக நூல்களையும், கற்பித்தலும் திருக்கோயில்கள் தோறும் மக்களுக்குச் சமய நெறியைப் போதிப்பித்தலும் மிகமேலான புண்ணியங்களாம். இவ்வாறு எங்கள் சற்குருநாத சுவாமிகளாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் அருளியிருக்கின்றார். இவை இக்கால நிலைமைக்கு அவசியம் வேண்டப்படுவனவாகும்.

இப் பொன்னுரைகளை நாவலருக்குப்பின் சிரமேற்கொண்டிருந்த சேர்.பொன். இராமநாதன் – ஸ்ரீமத் சிவபாதசுந்தரம் ஆகிய இவர்களின் முயற்சியால தொடங்கப்பெற்ற கந்தவனம் சைவ வித்தியாபிவிருத்திச் சங்கத்தார், பொலிகண்டி (கந்தவனம்) பாலாவி என்னும் காணிக்குள் வித்தியாசாலை ஒன்றை அமைத்திருக்கிறார்கள். இப்பாடசாலை 17-1-57 -ல் ஆரம்பமாயது. அவ்வமயம் பல சைவப் பெரியார்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், பெற்றோர்கள் புடைசூழப் பிள்ளையார் கோவில சந்நிதியிலிருந்து மேள வாத்தியத்துடன் சென்று 200 சைவப் பிள்ளைகள் பாடசாலையில் பிரவேசம் செய்தனர். பின் கலைமகள் திருவுருவப் படத்தைப் பாடசாலையில் பிரதிட்டை செய்தனர். வகுப்புகள் ஜே. எஸ். சி. வரையும் இருக்கின்றன. காரைநகர் வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலையில் பல வருடம் தலைமை யாசிரியராகக் கடமையாற்றி உபகாரச் சம்பளம் பெறும் பெரியார் திரு. பண்டிதர் சு. இராமசுவாமிப்பிள்ளை யவர்கள் தலைமைப் பதவி யேற்று நான்கு ஆசிரியர்களுடன் மிகப் பேருக்கங் கொண்டு இப்பாடசாலையை நடாத்தி வருகின்றார்.வித்தியாதிகாரி திரு. சோமசேகரம் அவர்கள இப்பாடசாலை விஷயத்தில் பெரும்பணி புரிகிறார்கள். பிள்ளைகள் சிவசின்னங்கள் அணிந்து பாடசாலைக்குச் செல்கிறார்கள். அவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் காலை 8-30 மணிக்கு ஆலய வழிபாடு செய்கிறார்கள். இப்பாடசாலைக்கு அண்மையில் இருக்கும் ஸ்ரீ பத்திரகாளியம்பாள் கோயில் ஸ்ரீ பிள்ளையார் கோவில், கந்தவனநாதர் கோயில் ஆகிய இம் மூன்று கோயில்களையும் தரிசித்து வீதிவலம் வருகிறார்கள். சபையாரின் நோக்கமும் இலங்கையில் உள்ள எல்லாப் பாடசாலைகளுக்குள்ளும் இப் பாடசாலையைப பழைய மரபு நெறி மாறாது, ஒரு முன்மாதிரியாய் நடாத்த வேண்டுமென்பதாகும்.

இதனல் இப்பாடசாலைக்குச் சைவப் பெரியார் ஸ்ரீமத். சிவபாதசுந்தரனாரின் பெயரையே பதிவு செய்வார்களெனப் பெரியார்கள் அபிப்பிராயப்படுவதும் பொருத்தமானதாகும். ஆகவே சபையார் பெரியாரின் சீடர்களாதலால் இதனைச் செய்வார்களெனத் தமிழகம் எதிர்பார்க்கிறது. இது நிற்க! இவ் வித்தியாசாலை தமிழகத்திற் சூரியனைப் போலப் பல கலைகளாகிய கிரகணங்களை வீசி, ஈழநாட்டு மக்களின் அறியாமையாகிய இருளை யோட்டும் சிவசோதியா யமையுமென்று நம்புகிறோம். ஆதலால் சைவப் பெற்றோர்கள் எல்லோரும் தங்கள் பிள்ளைகளை இச் சைவப்பாடசாலைக்கு அனுப்ப வேண்டும்.

சே. கோவிந்தசாமி
தென்மயிலை

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# விஞ்ஞானம் சமயத்துக்கு மாறானதா?

## அகிலாண்டத்தில் எதுபற்றி விஞ்ஞானி அறிதல்கூடும்?

## பிரமத்தின்இடம் அண்டத்தில்எது?

சமயத்துக்கு அல்லது தத்துவஞானத்துக்கு, விஞ்ஞானம் எந்தவிதமாயும் மாறுபாடானதொன்றல்ல. அவை எல்லாம் ஒரே உண்மையை அறியத்தரும் பல்வேறு வழிகளாகும். கடவுள் உண்மைப் பொருளாயிருக்கின்றார். ஆகையினுலே உண்மைப்பொருளை உணர முயலும் ஒவ்வொருவரும் கடவுளின் அடியாராக விளங்குகின்றார். இங்கே நாம் காணும் விஞ்ஞான நிகழ்ச்சிகளெல்லாம் எந்த உண்மையை எமக்குக் காண்பிக்கின்றன? தானே பலகூறுகப் பிரிக்கும் அணுவிலும், தானே உண்டாகும் சலவாயுக் குண்டிலும் தானே உண்டாக்கும் யந்திரத்திலும், மனிதனே இவ்வுலகிலுள்ள எல்லாவற்றிலும் உயர்ந்தவன் என்ற உண்மையை அவை காண்பிக்கின்றன.

விஞ்ஞானம் எது ஒன்றை நனகு விளக்குகின்றதென்றால், அது சர்வ வியாபகமாயுள்ளது சடப்பொருள் என்பதையல்ல, சர்வ வியாபகமாயுள்ளது சித்துப்பொருளே - அறிவுள்ள உயிர்ப் பொருளே என்ற உயர்ந்த உண்மையை நன்கு விளக்குகின்றது. எங்கள் நாட்டிலே பிரமம் என்ற ஒரு சொல்லை விரும்பித் தேடிக கையாளுகின்றோம். அச்சொல்லைக கையாளுவது நாம் அறிதற்கு முயலும் உண்மையைக குறிப்பிடுதற்கு மாத்திரமல்ல அந்த உண்மையை அறிய முயலும் மனிதன் எனப்படும் பொருளிலுள்ள உயிரையும்குறிப்பிடுதற்கேயாகும். இவ்வுண்மையை மேலும் விளக்கிச் சொல்லுவதானல்,' பிரமம்" என்பதன் உண்மைத் தன்மையை அறிய நாம் முயலுகின்றோம. அவ்வாறு அறிய நாம் முயற்சிப்பதும், எம்முள்ளிருக்கும் பிரமத்தின் செயலேயாகும் என்னும் உண்மையை அம்முயற்சியால நாம் அறியச் செய்தற்கென்று காண்க. அகிலாண்டம்பற்றி விஞ்ஞானம் தரும் ஆராய்ச்சி உண்மையை நாம ஏற்கின்றோம். ஆனல் இவ்வாராய்ச்சி உண்மையை விளக்குவது மற்றென்ருகின்றது.

அகிலாண்டத்தின் ஆதி எமக்குத் தெரியாது. அந்தமும் தெரியாது; நடுவை மாத்திரம் தான் நாம் அறிகின்றோம். நடுவிலுள்ளதை மாத்திரம்தான் விஞ்ஞானிகள் ஆராய்ந்து தங்கள் முடிபுகளை எமக்கு அறியத் தருகின்றனர். அகிலாண்டத்தையும் அதுபற்றி விஞ்ஞானிகள் அறியத்தரும் முடிபுகளையும் பார்த்தால், அகிலாண்டத்தின் மூந்திய நிலைமையையே மீட்டும் நாம் இன்று காண்பதாயில்லை. அது தொடர்ந்து வளர்ந்து எதிர்காலத்திலும் வளர்வதொன்ருகக் காண்கின்றோம்.

அகிலாண்டத்துக்கும் உயிர் நாடியாயுள்ள இரகசியப் பொருள் எதுவோ ஒன்று இருந்து தன்னைப் படிப்படியாய் வெளிப்படுத்திக்கொண்டு வருகின்றதென்று விஞ்ஞானிகளே கருதத்தொடங்கிவிட்டனர். நடுநாயகமாயுள்ள உண்மைப் பொருளொன்று ஞான ஐசுவரியங்களை வெளிப்படுத்துகின்றது; அவ்வாறு வெளிப்படுத்துந் தன்மைகளில் வேறுபாடுகளிருக்கின்றன. விஞ்ஞானத்துறை ஆராய்ச்சி முடிபுகள் பூரணமானவையல்ல என்பதை இக்கால விஞ்ஞானிகளுட் பலர் ஒப்புக்கொள்ளுகின்றனர்; சரியான முறையில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்தால் அது நிலையில்லாப் பொருளகளிலிருந்து நிலையான பொருளை அறிய உதவுகின்றது என்பதை அவர்கள் காண்பிக்கின்றனர். இங்கே குறிப்பிட்ட இரகசியமானது சொல்லால் அளவிட்டுக் காண்பிக்கத்தக்கதல்ல, தர்க்கத்தால் விளக்கத்தக்கதல்ல என்று அவர்கள் சொல்லுகின்றனர்.

ஆகையினுலே மக்களின் மன நிலையானது தாழ்மை வணக்கம், பயபக்தி, என்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## பல்கலைக் கழக இயக்கம்

### "நாவலர் கழகம்" அமைக்கும் இடைக்காலச் செயல்

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கப் பொதுக்கூட்டமொன்று வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகமண்டபத்தில் சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இயக்கத்தை முன்னேற்றுதற்கு உதவுமாறு வேண்டப்பட்ட உறுப்பினர் தொகையான 1000 பூர்த்தி யடைந்து விட்டதென்று அப்பொழுது அறிவிக்கப்பட்டது. தமிழ்ப் பல்கலைக் கழகமொன்றமைத்தற்கு முதல் மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக மறுத்தமைபற்றிக் குறிப்பிடப்பட்டது. கலாசாரப் பல்கலைக் கழகம், பல்கலைக் கழக இணைப்புக் கல்லூரி ஆகியவை அமைப்பது பற்றி முதல்மந்திரி ஆலோசனை கேட்டாரென்பதும் குறிப்பிடப்பட்டு ஆராயப் பட்டது. இணைப்புக்கல்லூரி பற்றிய தீர்மானம் அடுத்த கூட்டத்திற் செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தின் இடைக்காலச் செயலாகக் கொழும்பில் "நாவலர்கழகம்"எனப் பெயரிய உயர்தர கல்விக் கழகம் அமைப்பதென்றும் அக்கழகத்தில் இலண்டன் பல்கலைக்கழகப் பரீட்சைகளுக்கு வேண்டிய கல்வி பயிற்றப்பெறுமென்றும், இக் கழகத்தில் சாதி சமய வேறுபாடின்றி யாவரும் கல்வி கற்கலாமென்றும் தீர்மானிக்கப் பெற்றது. இது உருவான பின் இந்தியாவுக்குச் சென்று கல்வி கற்க வேண்டிய தேவை ஏற்படாதென்று கூறப்படுகின்றது. இப்பொழுது இக் கழகம் கொழும்பு இந்துக்கல்லூரியில் நடைபெறக்கூடுமென்றும் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைவராய்க் கடமையாற்றக்கூடு மென்றும் இத்தொடர்பிற் குறிப்பிடப்படுகின்றது.

### ஐ. தே. கட்சியின் மொழிக்கொள்கை

#### ஸ்ரீ டட்லி சேனநாயகவின் கருத்து

ஸ்ரீ டட்லி சேனநாயக ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் சேர்ந்துவிட்டார். அவர் பாராளுமன்றப் பதவியை விரும்பாது தமது கட்சியைப் பலப்படுத்தும் துறையில் முயற்சிப்பாராம். புத்துயிர் பெற்று வரும் ஐக்கியதேசியக்கட்சியும் தமிழ்மொழிக்குச் சிங்களத்துடன் நாடெங்கும் சம உரிமை கொடுப்பதை எதிர்க்குமாம். ஆனல் நாட்டுமக்களுக்கும்அரசாங்கத்துக்கு மிடையில் நடைபெறுகின்றகடிதப்போக்குவரத்துக்கள் இருமொழிகளிலும் நடக்குமாம். மொழிப் பிணக்குத் தீர்க்கும் வழி இதுவாகக்கொண்டு தேசிய ஒற்றுமையை உருவாக்குதல் இயலும் என்பது இக்கட்சியாரின் கருத்தாகக் கூறப்படுகின்றது.

## மாணுக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

### பெரியபுராண வசனம்

=o=

#### பரமசிவனின் பக்தனுக்குரியேன்

ஞாயிறு என்று ஊர். அங்கு வேளாளரிற் சிறந்த ஒருவர். பெயர் ஞாயிறு கிழவர். சங்கிலியார் என்று ஒரு புத்திரி இவருக்கு. தேவி பக்தியிற் சிறந்தவள். பருவ வயதின் எல்லையை அடைந்துவிட்டாள். விவாசம் பேசினார்கள். இவர்கள் பேச்சு சங்கிலிக்கு விருப்பமில்லை. "பரமசிவனின் ஒரு பக்தனுக்கே உரியவள் நான்" என்றுமனஞ் சோர்ந்தாள். பெற்றார் அவள் விருப்பத்தையறிந்து —திருவொற்றியூர்க் கன்னிமாடத்தி லிருந்து தொண்டு செய்ய வைத்தனர்.

சங்கிலியின் சங்கதி யறியாது ஒருவன் தனக்கு மணம் பேசுவித்தான். மணம் பேசி வந்தவர்களோடு அவனும் மாண்டு போனான். "உய்ய விரும்பினவர்கள் சங்கிலியின் விஷயத்தில் வாய் வையார்கள்" எனப் பெற்றோரும் விஷயமறிந்த மற்றோரும் பேசிக்கொண்டனர். சங்கிலி திருவொற்றியூரருக்கு மாலை தொடுத்துக் கொடுத்துத் தொண்டுபுரிந்து கொண்டு வந்தார்.

#### பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழன்

சுந்தரர் ஒருநாள் அடியார் திருத் தொண்டுகளைக் காண விரும்பினார். 'காலஞ் செய்வது ஞாலஞ் செய்யாது' என்பார்கள். புட்ப மண்டபப் பக்கம் போனார். மின்னி மறைந்தது ஒருஉருவம். விதி சதிசெய்து விட்டது. யார்? அவள் என்றார், பக்கத்திருந்தவர்களை நோக்கி. "அவர்கள்; பெயர் சங்கிலி, பரமசிவனின் பக்தை" என்றனர். சுந்தரர் போனார் ஆலயத்துள்ளே. கேட்டார் 'அவளை எனக்குத்தா!" என்று. தருவோம் கவலையை விடு" என்றான் பரமன். சங்கிலிக்கும் சொப்பனத்தில் அருள் புரிந்தார். சங்கிலி, "பெருமானே! அவர் திருவாரூர்; இவள் திருவொற்றியூர், இதனைத் திருவுளங்கொண்டருளும்" என்றார். "பெண்ணே! உன்னைப் பிரியேன்" என்று அவன் சத்தியஞ் செய்வான் என இறைவனருளி இப்படிச் செய்தால் அவள் உடன்படுவாள் என்று சுந்தரர்க்குத் திருவுளஞ் செய்தார். அப்பொழுது சுந்தரர் நான் சபதஞ் செய்கையில், தேவரீர் மகிழடியில் இருத்தல் வேண்டும்" எனக் கேட்டார். "ஆம்" என்ற அப்பன், சங்கிலிக்குச் "சுந்தரன் சபதத்திற்கு வந்தால் மகிழடிக்குவா! என்று கேள்" என உணர்த்தி மறைந்தார். பாலுக்குங் காவல் பூனைக்குந்தோழன் என்னே! பரமன் திருவிளையாடல்.

இதுவரையும் - நாயனார் செய்த தல யாத்திரைகளையும் ஆங்காங்கு நிகழ்ந்த அற்புதச் செயல்களையும், இறைவன் நாயனருக்கு அருள் புரிந்தவாறுகளையும் அறிந்துகொண்டீர்கள். ஈற்றில், புனிதமான தெய்வக் காதலின் தன்மை குண்டையூரில் நெல் பெற்றமை, கோட்புலி நாயனருடைய புத்திரிகளுக்குத் தந்தையானமை, செங்கற்கள் பொன் கற்களாக மாறினமை, கூடலையாற்றூர் இறைவனல் வலிந்தாட் கொள்ளப் பட்டமை, ஆற்றிலே இட்ட பொன்னைக் குளத்திலே எடுத்தமை, பந்தர் வைத்தும் ஓடுகொண்டிரந்தும் பசியாற்றியமை, சங்கிலிக்கும் சுந்தரர்க்கும் மணம் முயன்றமை முதலான பகுதிகள் கருத்தில் இருத்த வேண்டியனவாகும்.

#### சுந்தரமூர்த்தி நாயனர் புராணம் III

—:—

சென்ற இருபாடல்களிலும், பெரிய புராணம், அதன் வரலாறு, நாயன்மார்வரலாறு, நம்பியாரூரர் அவதாரம், இறைவனல் தடுத்தாட் கொள்ளப்பட்டமை, இறையருள் புரிந்த தன்மை, பரவை திருமணம் முதலானவிஷயங்கள்பற்றி அறிந்து கொண்டீர்கள். இனிச் சங்கிலியார் திருமணம்.

#### பெண்ணே உன்னை விட்டுப் பிரியேன்

நாயனர்-சங்கிலியார் திருமணத்தில் இறைவன் இருவருக்கு மிடையில் நிகழ்த்திய திருவிளையாடல் ஒரு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## மாணவர் மதிவள மன்றம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

பெருவிளையாடல் ஆகும். இறைவன் அருளிய யாவற்றையுஞ் சேடியருக்குச் சங்கிலியார் சொல்லிக் கோயிலுக்குச் சென்றார். "எப்போதுவருவாரோ" என்று வரவு பார்த்திருந்த சுந்தரர் கண்டார் சங்கிலியாரை. விரைந்து சென்று விஷயத்தை விளம்பினர். பெரிய நாணமும், மௌனமும் சங்கிலிக்கு. சேடியர்கள் சொன்னார்கள், "இது சின்ன விஷயம், இதற்கெல்லாம் சந்நிதானத்தின் முன்னர்ச் சத்தியஞ் செய்தல் வேண்டியதில்லை; அதோ! அந்த மகிழடியில் சென்று செய்தாற் போதும்" என்பதாக. தட்டினாற் கருமம் கெட்டுவிடும் என்று உடன்பட்டார். மகிழை மும்முறை வலம் வந்து, "உன்னை நான் பிரியேன்" என்று செய்தார் சபதம். மங்கல மணவினை மறுநாள் நிறைவேறியது. இருவரும் மகிழ்ந்து இனிது இருந்தனர்.

**சத்தியந் தவறுநல் மெத்தவுங் கெடுதி**

இங்ஙனமாக ஒருநாள், "வன்மிக நாதரை மறந்தேனே" என நினைத்தார். "பத்திமையுமடிமையையும்' என்று பாடிக்கொண்டு திருவாரூருக்குப் புறப்பட்டார். சபதம் முறிந்தது. பலன்! இரண்டு கண்களும் மறைந்தன. தவறுணர்ந்து, துயர் நீக்கும் பொருட்டு "அழுக்கு மெய்கொடு" என்னும் பதிகம் பாடிப்பார்த்தார். சரிவரவில்லை. சிலர் வழிகாட்டத் திருமுல்லை வாயிலில் "விண் பணிந்தேத்தும் வேதியா" என்னும் பதிகம் பாடித் திருவெண் பாக்கம்' அடைந்தார்.

அங்கு, 'திருக்கோயிலுள் ளீரே" என, இறைவன் ஊன்றுகோல் கொடுத்து "உள்ளோம் போகீர்" என அருளினார். அங்கு சென்று பதிகம் பாடிப் பழையனூருக்குப் புறப்பட்டார் அதன் எல்லையில் திருவாலங்காடு. காரைக்காலம்மையார் தலையாலே பிரதக்ஷிணஞ் செய்த தலம். அதனை நோக்கி "மூத்தா முத்திப்" பதிகமருளிக் காஞ்சீபுரஞ் சேர்ந்தார்.

[வளரும்]




தேவாரச் சிறுகதை

# கங்கை நங்கையின் உற்பத்தி

## சடா முடியில் இடம் பெற்ற காட்சி

## உமையம்மையின் உள்ளத்தை மாற்றிய திரு நடனம்

ஸ்ரீ வ. குகசர்மா

(1)

மெல்லிய ஒருவித இனிய நாதத்துடன் கடல் அலைகள் தொடர்ந்து கரையில் மோதிக் கொண்டிருந்தன. நானும் என் நண்பனும் இயற்கையின் அழகுச் சுவைப்பில் ஆழ்ந்து அத்தொடர்பிற் பலவித விடயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம் "சிவபெருமான் ஏன் நடனமாடினார்" என்று திடீரென்று என் நண்பன் என்னைக் கேட்டார். நான் பதில் கூறத் தயங்கினேன். காரணம் நாங்கள் நண்பர்களாக இருந்தாலும் மத சம்பந்தமாக எங்கள் இரண்டு உள்ளங்களும் வேறுபட்டேயிருந்தன. நான் மதத்தில் அதிகப் பற்றுள்ளவன் என என்னை நினைத்துக்கொண்டிருந்தேன். எனது நண்பன் எனது மனநம்பிக்கையைக் கேலி செய்பவர் என்பதுதான் எனது அபிப்பிராயம். அதிக நண்பர்கள் கூடும் இடங்களிலும் அவர் சமயக் கொள்கைகளை எடுத்தெறிந்தே பேசுவார். ஆகையால் நாம் தனித்திருந்து கதைத்து மகிழும் வேளையில் மதசம்பந்தமான பேச்சுக்களை நான் விரும்புவதில்லை. நண்பன இவ்வாறு கேட்கவே நான் அசிரத்தையாக "அவர் நடனத்தைப் பஞ்சகிருத்திய நடனம் எனப் பெரியோர்கள் கூறுகிறார்கள் அதாவது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்வதற்கே நடனமாடுகிறார்.' என்று கூறினேன். இது பொருத்தமில்லாத நியாயம்" என்றார் நண்பன் நான் பதில் கூறாது பேசாதிருந்தேன். நான் எதிர்பார்த்தது தானே? ஆனால் நண்பன் மேலும் தொடர்ந்தார். "நான் கூறுகிறேன் கேள்" என்று தொடங்கினார். நான் ஆச்சரியத்துடன் பதில் பேசாமல் அவர் சொல்வதையே கேட்டுக் கொண்டிருந்தேன்.

2 அன்றொருநாள் மாலை நேரம். கைலாசபதியின் ஒரு அமைதியான சாரலில் சிவபெருமான் தவக்கோலம் கொண்டு தனித்து வீற்றிருக்கிறார். மலைமகள் கொழுநனை அர்ச்சிப்பதற்காக மாலைமரும் மலர்களைத் தேடிக் கொண்டிருக்கிறாள். சிவபெருமான் கண் விழித்து உமையம்மையாரை அன்புடன் நோக்கி நீண்ட காலமாய் விட்டது. ஓர் மோன நிலை. மலைமகள் தவறுசெய்து விட்டாள். கணவனைப் பரீட்சை செய்யத் துணிந்தாள். அதன் விபரீத பலன்தான் இது. விளையாட்டாகப் பதியின் கண்களைப் பொத்தினாள். உலகமெங்கும் இருள் சூழ்ந்தது. பசுபதி தன் நெற்றிக் கண்ணால் அந்த இருளையகற்றினார். கண்டு கலங்கிய உமையம்மையாரின் கரங்கள் வேர்த்தன. வேர்வையில் கங்கை என்னும் நங்கை உற்பத்தியானாள். அப்போதிருந்த அச்சத்தில் உமையம்மையார் நீர் மங்கை தோற்றியதைக் கவனிக்கவில்லை. இறைவர் வெகுண்டார். மலைமகளை நோக்கி, பெண்ணே நீ உலகத்தை ஒரு காரணமும் இல்லாமல் அந்தகாரத்தில் ஆழ்த்தினாய் அந்தப் பாவத்தை நீ அனுபவிக்க வேண்டும்' என்று கூறினார் மலைமகள் பேச முயலு முன்பே இறைவர் யோக நித்திரையில் ஆழ்ந்து விட்டார். அன்று தொடக்கம் காலையும் மாலையும் நறுமலர் கொண்டு அருச்சித்தாள் மலைமகள். இறைவன தன்னில் அன்பு கூரும் நாளை எதிர்பார்த்திருந்தாள். கங்கை என்னும் நீர் நங்கை பல இடங்களுக்கும் போனாள். அவளின் மனதில் தாயன்பு நிரம்பியிருந்தது ஆனால் அதைச் செயலில் காட்ட முடியவில்லை. அவள் செல்லும் வேகத்தைக் கண்டு யாவரும் நடுங்கினர். அது கண்டும் அவளால் தன் வேகத்தைச் சுருக்கிக்கொள்ள முடியவில்லை. தன்னை யாவரும் வெறுப்பதைக் கங்கை கண்டு மனம் கூசினாள் யாவரும் வெறுக்கும்போது இறைவரின் எண்ணம் உண்டாகும். கங்கையும் இறைவனை நாடிச் சென்றாள்.

(3)

கங்கையைக் கண்டவுடன் இறைவனின் யோக நித்திரை ஏனோ தெளிந்தது. அவர் கங்கையைப் பார்த்து இளநகை பூத்தார்; கங்கையோ பதிலுக்குக் கண்ணீர் வடித்தாள் "சுவாமி எனது வருத்தம் உங்கட்குச் சிரிப்பாய் இருக்கிறதா?" என்று கங்கை கேட்டாள். 'இல்லை உனது கடுமை மாறும் காலம் வந்து விட்டது. உனது மனதிலுள்ள அன்பு வெளியில் சுரந்து தேவ உலகையும் பூவுலகத்தையும் ஒருங்கே இரட்சிப்பாய்" என்று கூறிய இறைவன் தமது கரங்களை நீட்டினார். கங்கை தனது பழைய கடுமையுடனே பாய்ந்தாள் அவள் வேகத்தை இறைவர் சடாமுடி தடுத்து விட்டது. அவள் அங்கேயே தங்கி விட்டாள். அவள் மனதில் எங்கிருந்தோ வந்த தாய்மையும் அருளும் பொங்கிப் பாய்ந்தன. மலர் கொய்யும் உமையம்மையாருக்குக் கங்கை பாய்ந்தபோது உண்டாகிய பேரொலி கேட்டது. மேலும் மலர் கொய்யாமல் கையில் உள்ள மலர்களுடன் ஓடி வந்தார். "என் பிரிய பத்தினியே வா"! என்று இறைவர் முகமலர்ச்சியுடன் அழைத்தார். மலைமகளின் முகம் மலரவில்லை. காரணம் தன் நாயகருடன் ஒரு இளம் பெண் அதவும் பிரதான இடமாகிய சிரசில். மலைமகளுக்குப் பக்கத்தில்தானே இடம். இறைவர் எழுந்து சென்றார் தலையில் உள்ள கங்காதேவியுடன். 'என்னிடம் கதைப்பதென்றால் அந்தப் பெண்ணை, தூர விட்டுவாரும்' என்றார் மலைமகள். அதெப்படி முடியும் அவளின் வேகம் உலகை அழித்துவிடுமே! என்றார் இறைவர். மலைமகள் எங்கேயோ போகத் தொடங்கினாள். இறைவர் யோசித்தார். தாம் முன்பு சாமகானத்தில் மயங்கி இராவணனுக்கு அருள் செய்தது அவர் ஞாபகத்தில் வந்தது. உடனே தானும் சாமகீதம் இசைக்கலானார் அதனால் மலைமகளின் போக்குத் தடைப்பட்டது. ஆனால் அவள் திரும்பிவரவுமில்லை, முகமலர்ச்சியைக் காட்டவுமில்லை. இறைவர் சற்று நேரம் பார்த்தார் பின்பு வேறொரு உபாயத்தைக் கையாண்டார் தாளத்துடன் கூடிய இசைக்கேற்றதாக நடனமாடத் தொடங்கினார். சற்று நேரத்தில் மலைமகளின் முகம் மலர்ச்சியைக் காட்டியது. மேலும் நேரம் போக அவள் யாவற்றையும் மறந்தாள். ஓடி வந்து இறைவன்து பாதத்தில் வீழ்ந்து விட்டாள், இறைவன் அன்புடன் அவளைத் தாக்கி அணைத்துக்கொண்டார்.

(4)

நேரம் போய்விட்டது வா போகலாம் என நண்பன் எழுந்தான். "என்ன இதை எங்கே கண்டுபிடித்தாய்' என்று கேட்டேன். நண்பன் ஏளனமாகப் பார்த்தான் "உனக்குத் தெரிந்த சமயம் இவ்வளவுதானா, சமயகுரவருள் ஒருவராகிய நாவுக்கரசரே இக்கதையைக் கூறியிருக்கிறாரே.

கூடினார் கங்கை யாளைக்
 கூடிய துழனி கேட்டாங்
கூடினாள் நங்கை யாளு
 மூடலை யொழிக்க வேண்டிப்
பாடினார் சாம வேதம்
 பாடிய பாணியாலே
ஆடினார் கெடில வேலி
 யதிகை வீரட்டனாரே.

என்ற பாசுரத்தை நீ படிக்கவில்லையா என்று கேட்டான். நான் வெட்கத்துடன் பேசாது எழுந்து நண்பன் பின்னே சென்றேன்.

---

## விஞ்ஞானம் சமயத்துக்கு … … …

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பன உடையதாயிருத்தல் வேண்டும்.

இப்பொழுது வேண்டப்படுவது மக்களின் கருத்துக்களில் மாற்றமல்ல, வாழ்க்கை முறையின் மாற்றமே வேண்டப்படுவது. நிலையான பேரின்ப வாழ்க்கையைப் புத்தகப்படிப்பாற் பெற்றுவிடமுடியாது. படிப்பை ஆழமாக்கி அதற்குத் தக்கபடி வாழ்க்கை முறைகளை மாற்றுதல் வேண்டும். வெறும் புத்தகப்படிப்பல்ல உண்மையின் உணர்வே வேண்டப்படுவது என்று எங்கள் அறிஞர் சொல்லுகின்றனர். அப்படியிருக்கவும் உயர்ந்த கருத்துக்களை வாயாற் சொல்லி அவற்றுக்கு நேர் மாறாக நாம் வாழ்வதைப் பாருங்கள். வாழ்க்கையில் மாற்றத்தைச் செய்யக்கூடிய மனநிலையை நாம் உண்டாக்கிக் கொள்ளுதல் வேண்டும். அந்த மாற்றத்தைப் பலவாறு செய்யலாம். அவற்றுள் பொது மக்களுக்கு ஏற்றதாய் உள்ளது ஒன்று பக்தி வைராக்கியத்தை வளர்த்தலாகும். சமயானுட்டானமானது எங்கள் வாழ்க்கையில் நாங்கள் செய்யும் செயல்களின் தன்மைகளிலிருந்து அறியக்கூடியதாயிருத்தல் வேண்டும் என்று கலாநிதி எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாவிலே பேசும்போது கூறினார்.

---

**சிங்கள ஆசிரியரால் உண்டாகிய நெருக்கடி**

ஏறாவூர் அரசினர் பாடசாலையிற் சிங்களம் கற்பிக்கும் பொருட்டுச் சிங்கள ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாராம். அப் பாடசாலையில் தமிழ் முஸ்லிம் பிள்ளைகள் ஏறக்குறைய நானூறு பேர். அவர்கள் யாவரும் பாடசாலைக்குப் போகமறுத்துவிட்டார்கள். சிங்கள ஆசிரியர் வெளியேற வேண்டுமென்னும் சுலோகங்களுடன் ஊர்வலங்கள் நடத்தப்படுகின்றன. கற்குடாப் பிரதிநிதிக்கு நிலைமையை அறிவித்துவிட்டுத் தங்கள் கருத்தை மட்டக்களப்புப்பகுதி வித்தியாதிகாரிக்குப் பெற்றோர் அறிவித்திருக்கின்றனராம்.

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடர்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 17—2—57 —— 23—2—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தேக சுகம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. உம்முடைய முயற்சிகளில் நீர் கவனமாயிருக்க வேண்டும். அல்லது பழிமொழிக்காளாககப்படுவீர். நண்பர் அதிக பிரயோசனமாயிருப்பர் ஆனல் அவர்களுடன் சண்டை தொடுக்க முந்தி நிற்க வேண்டாம். அவர்களுடைய நன்மொழியைப் பின்பற்றவும். வியாழன், வெள்ளி, சனி காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

தேக சுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. குடும்பக்கருமங்கள் குழப்பமாயிருக்கும் ஆனல் உம்முடைய பகைவரை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும். புது முயற்சிகள் நல்ல பலனைத்தரும். ஆனல் மிகுந்த எதிர்ப்பை நீர் முன்னிடுவீர். சனி பிற்பகலைக் கவனமாய்க் கழிக்கவும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3. 1ம் பாதம்.

விசேட கருமங்களில் எந்த ஒரு தீர்மானத்தையும் செய்யமாட்டாது வருத்தப்படுவீர். நடைமுறைகளில் மாற்றங்களுக் கிடமுண்டு. எதிரிகள் அழிவுக்கும், புகழுக்கும் இடமுண்டு. பண நெருக்கடியும் குறையும்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

கந்தோரில் இந்தவாரம் தொந்தரவுகள்பற்றிக கவனமா யிருக்கவும் உம்முடைய மேலதிகாரியுடன் நீர் முரண்பட்டு நிற்பீர். இனத்தவர்கள்மூலம் தொந்தரவுகளுக்கும் நண்பர்களிடையே பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

பெண்ணின நண்பர் உமக்கு இந்த வாரம் சில தொந்தரவுகளை உண்டாக்குவார்கள். இனத்தவர்களுடன் பிழை எண்ணங்களுக்கும் கந்தோரில் சில சண்டைகளுக்குமிடமுண்டு. ஆனல் இவற்றில் நீர் வெற்றிபெற்று வெளிவருவீர்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பணத்துறையில் நல்ல வாரம் புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். தனலாபங்களும் நிச்சயம், எதிர்ப்பு நீங்கும் உம்முடைய இடைஞ்சல்களுட் பலவற்றை நீர் நீக்கக்கூடியதாயுமிருக்கும்.

**துலாம்** சித்திரை 3 4ம், பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தேகசுகம் இந்த வாரம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. செலவும் அதிகரிக்கும். ஆனல் நண்பரும் இனத்தவர்களும் அதிக உதவியாயிருப்பர். வார இறுதி சில தனலாபங்களைத்தரும்.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

உம்முடைய பொறுப்பிலிருந்து இந்த வாரம் சில பாரங்கள் நீக்கப்படும் போட்டியிடுவோரை வெல்லுதலும் நிச்சயம். காணிகள் காணிப் பொருள்கள் மூலம் நீர் சிறிது பணலாபமும் பெறுவீர்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இந்த வாரம் சுகவீனங்களுக் கிடமுண்டு. சுகவீனம் காரணமாய் நீர் உம்முடைய கடமைகளைச் செய்யமுடியாமல் வருத்தப்படுவீர். ஆனல் பணத்துறையில் நல்ல வாரம். சமுகசித்தியும் நிச்சயம்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

பணத்துறையில் நல்ல வாரம், அன்னியரிடமிருந்தும் அறியாதவர்களிடமிருந்தும் நீர் அதிகம் இலாபமடைவீர். தேகசுகமும் திருந்தும், உம்முடைய முயற்சிகளை முன்னேற்றவும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

முதல் இருநாட்களும் குழப்பமாயிருக்கும். உம்முடைய எல்லாக் கருமங்களிலும் நீர் கவனமாயிருக்க வேண்டும்: வார மிகுதி வேண்டியளவு நல்லாயிருக்கும். தனலாபமும், புகழும், சமுகசித்தியும் நிச்சயம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி,

முதல் இருநாட்களும் வியாபார கருமங்களுக்கு நல்லாயிருக்கும். செவ்வாயும் புதனும் கவனமாய்க் கழிக்கவேண்டும். வார மிகுதி திரும்பவும் நன்றாகும்.

---

## நாவலர் மண்டபத்தில்
# திருவள்ளுவர் திருநாள்

நிகழும் துர்முகி ஹு மாசி மீ ௪ வ (17-2-57) ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் சபைநாவலர் மண்டபத்தில் கீழ்க் காணும் கிரமப்படி திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்படும்.

நிகழ்ச்சிகள்:

இரவு 6-30 — 7 கடவுளாராதனை<br>
தமிழ்மறையோதல்<br>
இசைமணி திரு. K. மாணிக்கவாசகர்<br>
இரவு 7 மணி விரிவுரைக்கூட்டம்<br>
தலைவர்:<br>
சைவபரிபாலன சபைத் தலைவர்<br>
திரு த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள்

1. 'திருவள்ளுவரும் வாழ்க்கையும்'' யாழ். இந்துக்கல்லூரிமாணவன் சோ. பத்மநாதன்
2. "திருவள்ளுவரும் இல்லறமும்" வித்துவான் திரு. பொன். முத்துக்குமாருஅவர்கள் B.O.L
3. "திருவள்ளுவரும் துறவறமும்" வித்துவான் திரு. க. கார்த்திகேசுஅவர்கள் B. A.
4. நன்றி கூறுதல்.

தமிழபிமானிகள் யாவரும் சமுகமளித்து திருவள்ளுவநாயனரின் அருளைப்பெறுவார்களாக.

சைவபரிபாலனசபை,<br>
யாழ்ப்பாணம், 13-2-57.

மு. மயில்வாகனம்,<br>
சமயப்பிரசார அமைச்சர்,

---

## கந்தவனத்திற் சைவப் பாடசாலை

2-ம் பக்கத் தொடர்ச்சி

அதுவுமல்லாமல் இப்பாடசாலைக்கு பெற்ருர்களின் உதவியே அவசியம் வேண்டப்படுவதாகும். இப்பெரும் தொண்டில் ஈடுபட்டு ஒத்துழைக்குமாறு பெற்றோர்களை அன்புடன் கேட்கின்ரேம். கந்தவன நாதரின் திருவருள் துணைபுரிவதாக.

## நன்கொடை

பருத்தித்துறை வியாபாரி மூலை திரு. ச. சு. நமசிவாயம் அவர்களின் புத்திரனும் கொழும்பு கோட்டை இணை நீதிபதி காரியாலயத்தில் எழுத்தாளராகக் கடமையாற்றியவருமாகிய திரு. சு. ந. தணிகாசலம் சென்ற ஆண்டு தமிழ்ச் சத்தியாக்கிரகம் நடந்த நாளாகிய 5 – 6 – 56 இரவு கத்திக்குத்துக்காளாகி இளமைப் பராயமாகிய இருபத்துமூன்ரும் வயசில் இவ்வுலக வாழ்வை நீத்தார். தைமீ 17௳ புதன்கிழமை (30 – 1 – 57) அவருடைய அந்தியேட்டி முதலிய கிரியைகள் நடந்தபோது சைவபரிபாலன சபைக்கு நன்கொடையாக வரித்தனுப்பிய ரூ. 2. சதம் 10 அன்புடன் ஏற்ரும். இறைவன் திருவருளால் அவர் ஆன்ம சாந்தி அடைவாராக.

—அதிபர்.

---

# விஞ்ஞானக்கல்வியால் வந்தவிளைவு

## கற்கவேண்டிய முறையும் பெறவேண்டிய பயனும்

மக்கள் நல சமுதாயத்தில் பல்கலைக் கழகத்தின் பணி, மக்களனைவரும் எளிதில் புரிந்துகொண்டு பயனுறத் தக்க விதத்தில், அறிவுச்செல்வங்களைப் பரப்புவதேயாகும். குன்றின்மீது இட்ட விளக்குப்போன்றது பல்கலைக்கழகம். பரிபூரண ஆன்மீகப் பெருவாழ்வைப் பெற்றுப் பிறவிப் பெரும்பயனை அடைந்த ஞானியர் பெருமக்களுங்கூட மக்களுடன் கலந்து பழகி, அவர்களுடைய சுகதுக்கங்களில் பங்குகொண்டு வாழ்ந்திருக்கிருர்கள் ஏன்? தாங்கள் பெற்ற பேரின்பப் பெருவாழ்வை மற்றவரும் பெற்றுப் பயனுற வேண்டுமென்ற பரந்த மனப்பான்மையினுல் தான் அதுபோன்றே ஒரு சில மேதைகளையோ கல்விமான்களையோ அல்லது விஞ்ஞானிகளையோ உருவாக்கிவிடுவதுடன் பல்கலைக்கழகத்தின் வேலை முடிவடைந்து விட்டதாகக் கருதக்கூடாது. மக்கள் நல சமுதாயத்தில் பல்கலைக் கழகத்தின் உண்மையான பணி, மக்களனைவரும் எளிதில் படித்துணர்ந்து பயனுறத்தக்க விதத்தில் கல்வி அறிவைப் பரப்புவதேயாகும்.

"தத்தவத் துறையில் மட்டும் ஆழ்ந்து பயின்று விசேட அறிவு பெற வேண்டுமென்ற மனப்பான்மை சில காலத்திற்கு முன்பு தலைகாட்டியது. அதன் விளைவு என்ன ஆயிற்று? மனித சமுதாயத்திலிருந்து தத்துவநூல் அறிஞர்கள் விலகி நிற்க நேரிட்டது; மக்களின் சுகதுக்கங்களிலிருந்து பிரிந்துநின்று ஏகாந்த வாழ்வு நடத்தும் போக்கை ஏற்படுத்தியது. தத்துவத் துறையில் மட்டுமே இணையற்ற ஆழ்ந்த புலமை பெற வேண்டுமென்ற எண்ணத்தால் வந்த விளை இது. அதே சமயத்தில் விஞ்ஞானத்தில் மட்டுமே முழுக் கவனத்தையும் முழுநேரத்தையும் செலுத்தி விஞ்ஞானத்தில் இணையற்ற புலமை பெறவேண்டும் என்ற எண்ணத்தினுல் அபாயகரமான நாச விளைவுகள் ஏற்பட்டுள்ளன. மனித சமுதாயத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் அனைத்திற்கும் விஞ்ஞானமே பதிலளிக்க முடியுமென்ற கருத்து நிலவத் தொடங்கியது. இக்கருத்தின் விளைவாக, ஆங்கிலம், வடமொழி, தமிழ் தத்துவநூல் போன்றவை ஒதுக்கப்பட்டுக் கிடந்தன. ஆனல் காலப்போக்கில, வெறும் விஞ்ஞானத்தில் மட்டுமே மனத்தையும் காலத்தையும் செலவிடுவது ஏற்றதல்ல என்பது உணரப்பட்டது. பல்கலைக் கழகத்தின் நோக்கம் ஏராளமான நிபுணர்களை மட்டும் உற்பத்தி செய்வதல்ல. விஞ்ஞானத்தைத் தத்துவக் கண்ணேட்டத்துடனும், தத்துவங்களை விஞ்ஞான உணர்வுடனும் அணுகக்கூடிய முழு மனிதனை உருவாக்குவதே பல்கலைக் கழகத்தின் நோக்கமாய் இருக்க வேண்டும். மனித இனத்தின் செல்வங்ளாகிய இசை, காவியம், ஓவியம் போன்ற கலைக் கருவூலங்களைப் புறக்கணித்து ஒதுக்கிவிடாமல், விஞ்ஞான உணர்வும் தத்துவக் கண்ணேட்டமுமுடைய சிறந்த வாழ்க்கையை நடத்துவதற்கு வேண்டிய சுதந்திர அறிவை ஊட்டுவதே பல்கலைக்கழகத்தின் நோக்கமாயிருக்கவேண்டும் என்று சென்னைப் பல்கலைக் கழக நூற்ருண்டு விழாவின் தொடர்பில் மதுரையிற் பேசும்போது கலாநிதி சி. பி. இராமசாமிஐயர் அவர்கள் கூறினர்.

---

## ஓர் விண்ணப்பம்

"நமது உறவினர்" எனும் நூலை எழுதி வெளிப்படுதத எண்ணுகிறேன். நமது சந்ததியார்கள் யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாணச் சரித்திரம், மானியம்பதியார் சந்ததி முறை, யாழ்ப்பாணக் கௌமுதி என்னும் நூல்களிற் காணப்படுகின்றனர். தொண்ட மண்டலம், சேயூர் (நெடுந்தீவு) இருமரபுந்தய்ய தனிநாயக முதலியார், திருக்கோவிலூர் (இணுவில்) பேராயிரமுடையார், உடுவில் மலலாவரதர், உடுவில் மாணுப்பிள்ளை, உடுவில் மாணுமுதலியார், பண்டத்தரிப்பு கனக சுந்தரமுதலியார், விளைவேலி இராசமழவர் (வட்டுமழவராயர்) எனவரும் சந்ததியார்களது பிள்ளைகளிற் சிலரையே நான் அறிவேன். அறியாதவரை அறிய ஆவல்கொண்டேன். மேற் கண்ட சந்ததிகளில் வரும் மக்கள் தங்கள் தலைமுறைப் பெயர்களை எழுதித் தரும்படி கேட்கிறேன். அவர்களது பெயர்களும் மேற்கூறிய நூலில் இடம்பெற விரும்புகிறேன்,

வணக்கம்.

அன்பன்<br>
டக்டர் காசிநாதன்<br>
சிவகாமிவாசா,<br>
சித்தன்கேணி.

Retired 1st Grade Lecturer and (Gazetted Senior Medical Officer College & Hospital of Integrated medicine, Madras.

---

## அரை மனத்துடன் தமிழில் அழைப்பு

புத்த ஜயந்தித் தொடர்பில் இந் நாட்டுக்கு வந்திருக்கும் கம்போடியா இளவரசரை ஆகாய விமான நிலையத்தில்வரவேற்பதற்கு வருமாறு அனுப்பிய அழைப்பிதழ்களில் ஆங்கிலம் தமிழ் சிங்களம் ஆகிய மூன்று மொழிகளும் இடம் பெற்றனவாம். ஆனல் அவருக்கு முதல் மந்திரி கொடுக்கும் வரவேற்புபசாரத்திற் பங்குபற்றுமாறு முதல்மந்திரி அனுப்பிய அழைப்பிதழ்களில் தமிழ் மொழி இடம்பெருது ஆங்கிலமும் சிங்களமுமே இடம் பெற்றனவாம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 10261

பண்டாரம் மாணிக்கம் மானிப்பாய் வழக்காளி

1 பொன்னுச்சாமி கணபதிப்பிள்ளை வட்டுக்கோட்டை கிழக்கு

2 ஆறுமுகம் தம்பையா மகள நேசம்மா

3 ஆறுமுகம் தம்பையா வட்டுக்கோட்டை மேற்கு

4 மயில்வாகனம் வேலாயுதபிள்ளை வட்டுக்கோட்டை கிழக்கு

5 அம்பலவாணர் கந்தையா வட்டுக்கோட்டை கிழக்கு

— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 10261-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1957-ம் ஆண்டு சித்திரை மாதம் 25-ம் திகதி (25-4-57, வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபாய் 6655 உம் இதில் ரூபாய் 5500 க்கு 25-8-53 தொடக்கம் 14-12-55 திகதி வரைக்கும் 100 க்கு 8 வீத வட்டியும் பின் தீர்வை கூட்டுத் தொகையில் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 317-20 சதமும்.

### ஆதன விபரம்

வடமாகாணம்டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வலிகாமம் மேற்கு வட்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை மடத்திற்புலம் கில. பர. பன்னிரண்டும், கல்வீடும், போட்டிக்கோவும் சிந்தமாக முதலாம் எதிரிக்குடையன. கிணறும் செய்பயிர் வான்பயிர்களும், எல்லை கிழக்கு கையொழுங்கை, வடக்கு இந்தக் காணியால் விடப்பட்ட சிறு வழியும் சங்கானை கிராம எல்லை. மேற்கு கதிரவேல்பிள்ளை பெண் வள்ளிஅம்மையின் உருமைக்காரருக்கும் பங்காளருக்கும் சின்னததம்பி செல்லத்துரையின் உருமைக்காரருக்கும் மாரிமுத்து பொன்னம்பலவாணரின் உரிமைக்காரருக்கும் உரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை, இந்தககாணி அடங்கலில் எட்டில் ஆறு பங்கும் அதற்குரியவைகளும், ஆனால் வீடும் போட்டிக்கோவும் சிந்தம். அத்துடன் இது ஆட்சிப்படி கிலப்பரப்பு ஒன்பதும் கல்வீடும் போட்டிக்கோவும் குசினியும் கிணறும், வான்பயிர் செய்பயிர்களும், எல்லை கிழக்கு இந்தக் காணியிலிருந்து விடப்பட்ட கையொழுங்கை, வடக்கு சங்கானை கிராம எல்லையும் மயில்வாகனம் கைம்பெண் உமையாத்தை தப்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனம், மேற்கு மயில்வாகனம் கைம்பெண் உமையாத்தைப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் முதலாம் எதிரிக்குமுரிய ஆதனங்கள்; தெற்கு ஒழுங்கை, இதில் இக்காணியின் கிழக்கெல்லைக் கையொழுங்கையிலிருந்து வடக்கு

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M. B. 502

1 வல்லிபுரம் அப்புத்துரை

2 பெண் தங்கரத்தினம் உரும்பராய் கிழக்கு வளக்காளிகள்

1 பொன்னம்பலம் சின்னத்தம்பி

2 பெண் சரஸ்வதி கொக்குவில் கிழக்கு

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M. B. 502-ம் இலகக வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணியை 1957-ம் ஆண்டு சித்திரை மாதம் 2-ந் திகதி (2-4-57) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபாய் 3490 ம் இதில் ரூபாய் 2500 க்கு 13-9-55 தொடக்கம் 9-11-55 திகதி வரைக்கும் 100க்கு ஏழு வீத வட்டியும் பின் தீர்வை கூட்டுத் தொகையில் இறுபடும் வரைக்கும் நாற்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 212-97 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர்க்கோவிற்பற்று கொக்குவில் இறை வன்னியன் சீமாவளவு கில பர. 4 1/16 ம் வீடும் செய்பயிர்களும் வடமேற்குப் பக்கத்தில் இருக்கும் கிணற்றில் பங்கும் மேற்கெல்லைக் காணியில் வடக்கெல்லை ஓரமாகப் போக்கு வரவு செய்யும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை நாகலிங்கத்தின் உருமைக்காரருக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு சிவசம்பு கைம்பெண் தங்கத்துக்குரிய ஆதனம், மேற்கு பொன்னையா பெண் பொன்னம்மாவுக்குரிய ஆதனம், தெற்கு கையொழுங்கை.

தா. செல்லையா
கொமிஷனர்.

No. 37, Colombogam Road,
Chundikuli, Jaffna.
M, 466 15-2 (து.200)

---

வேலியால் மேற்கெல்லைக்காணி, உமயாததைப்பிள்ளையின் காணிக்குப் போககு வரவு செய்யும் பாதையுருத்தும் குறித்த கிணற்றில் நாலிலொரு பங்கும் வடக்கெல்லையாகிய குறித்த பாதையால் வழிவாய்க்கால் உருத்தும் பிறநீங்கலாக மிகுதியடக்கலும் முற்பதிப்பு E 239/19.

தா. செல்லையா
கொமிஷனர்,

No. 37, Colombogam Road,
Chundikuli Jaffna.
M 465 15-2-57 (து. 200)

## நீர்வேலி கிராமச்சங்க வேலைகளின் ஒப்பந்த அறிவித்தல்

பின்னாற் காணப்படும் கிராம வேலைகள் ஒப்பந்தமாகக் கொடுப்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன:-

கிராமச்சங்கக் கந்தோரில் ரூபா 10 கட்டி எடுக்கும் மாதிரிப் பத்திரங்களிலேயே மனுச் செய்ய வேண்டும். அப்பத்திரங்கள் 1957-ம் ஆ மாசி௴ 21-ம் ௳ வியாழக்கிழமை பகல் 12மணிக்கு முன் உரும்பராய் ஷை சங்கக் கந்தோரில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கடதாசிக் கூட்டில் அடைக்கப்பட்டு கூட்டின் இடது மேற்பக்கத்தில் மனுப்பத்திரம் என்று எழுதி நீர்வேலி கிராமச்சங்கத் தலைவருக்கென விலாசமிட்டு 1957-ம் ஆ மாசி௴ 23-ம் ௳ சனிக்கிழமை பகல் 10 மணிக்குமுன் நீர்வேலி ஷை சங்கக்கந்தோரில் கிடைக்கும்படி அனுப்புக.

தெரிந்தெடுத்த கேள்விக்காரன் ஷை சங்கத்தலைவருடன் ஒரு கிழமைக்குள் பொருத்தம் எழுதிக் கொள்ள வேண்டும். மனுப்பத்திரங்களை அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ சங்கத்துக்கு அதிகாரமுண்டு.

**வேலைகளின் விபரம்:**

(1) நீர்வேலி மாசுவன் மயான கிணறு வெட்டிக்கட்ட ஒப்பந்த மனுப்பத்திரம்அழைக்கப்படுகின்றது.

2) நீர்வேலி கிராமச்சங்க கட்டடத்துடன் ஓர் அறை கட்டுவதற்கு ஒப்பந்த மனுப்பத்திரம் அழைக்கப்படுகிறது.

(3) உரும்பராய் ஞானவயிரவ கோவிலடிக் கேணியைக் கிணறுகக்கட்ட.

(4) உரும்பராய் இளங்காடு மயான கிணறு வெட்டிக் கட்ட.

அ அத்தியார் அருணசலம்
1957-ம் ஆ மாசி௴ 7 ௳
. 463 8, 15-2-57

## மொழிக் கொள்கை விளக்கப்படுமாம்

அரசாங்கத்தின் மொழிக் கொள்கைபற்றிய விளக்கமொன்றை வெளியிடுதற்கு மந்திரிசபையார் தீர்மானித்துள்ளனராம். நீதியான முறையில் தமிழ் மொழி எவ்வாறு இடம் பெறும் என்பதே அவ் விளக்கத்தின் உட்பொருளாகும். தனிச்சிங்களச் சட்டத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது. சிங்களமே தனி அரசாங்கமொழியாயிருப்பதற்கும் கல்வி பயிற்றும் மொழிக் கொள்கைக்கும் தொடர்பு ஒன்றுமிருக்கமாட்டாதென்றும், சர்வகலாசாலை உட்பட கல்விக்கழகங்களில் ஆங்கிலம், சிங்களம் தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் கல்வி பயிற்றப்படுமென்றும், அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுதற்கு அரசாங்க மொழிக்கொள்கை எவ்விதமாயும் பாதகமாயிருக்க மாட்டாதென்றும், நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையிற் கடிதப் போக்குவரத்து மும்மொழிகளிலும் நடைபெறுமென்றும், அரசாங்கச் சார்பிற் கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

## அரசாங்கமும் ஆயுர்வேத மாணவரும்

சுகாதார அமைச்சுக்கும் ஆயுர்வேத மாணவருக்குமிடையில் வளர்ந்துவரும் பிணக்கு மற்றொரு மாற்றத்தை மேற்கொள்ளுகின்றது. அரசாங்க ஆயுர்வேதக் கல்லூரிக்கு மாணவர் பின்போடாது போக வேண்டுமென்று சத்தியாக்கிரகம் செய்யும் மாணவருக்கு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். கல்லூரிக்குத் திரும்பிப் போவதில்லை என்று மாணவர் விடையிறுத்துள்ளனர்.

இவை இப்படியிருக்க, வணமலவான ஞானசார தீரோவும் வைத்திய கலாநிதி ஆர். பி. இலெனோராவும் சேர்ந்து மற்றொரு ஆயுர்வேதக் கல்லூரியை அமைத்து சத்தியாக்கிரகம் செய்யும் மாணவர்களை ஆரம்ப மாணவர்களாக வைத்து அதில் வைத்தியக் கல்வி பயிற்ற ஒழுங்கு செய்துள்ளனராம்.

## ஈழ நாட்டுக்கு ஓர் சைவ ஆதீனம்

=o=

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தைப் பெரிய புராணம் நன்கு எடுத்துக்காட்டுகின்றது. பிராமணர், வேடர், வேளாளர், பறையர், வணிகர், பரதவர் முதலிய எல்லோருக்கும் அவரது அனுக்கிரகம் தாராளமாகக் கிடைத்தது.

இன்றைய சமுதாயத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை நாம் பராமுகஞ் செய்திருக்கவியலாது. எல்லா வகுப்புகளிலுமிருந்து ஏற்ற தகுதி வாய்ந்த மாணவர்களைத் தெரிந்தெடுத்து அவர்கட்குச் சமயத்துறையில் அறிவும் பயிற்சியும் ஏற்படும்படி கற்பித்து அவர்கள் சமய போதகர்களாக நாட்டில் தொண்டாற்றச் செய்யவேண்டும். இவ்வித பணிகள் உரிய முறையில் நிலைபெற்று வரின் சைவ மக்கட்கிடையில் பிணக்குகள் நீங்கி ஒற்றுமையேற்பட வசதியுண்டாவதுடன் சைவ சமயமும் உண்மையான விருத்தியை அடையும்.

இத்தொண்டு ஒருநாளில் கைகூடிவிடக்கூடிய தொன்றன்று. இது பூரண நிலையை அடையச் செய்வதற்குப் பல வருடங்களல்ல, பல நூற்றாண்டுகளும் ஒருபோது செல்லவேண்டியதாகும். எப்படியானாலும் இப்பணி விரைந்து ஆரம்பிக்கப்படவேண்டும். எவ்வளவு விரைவாக ஆரம்பித்தாலும் அவ்வளவுக்குச் சைவ சமுகம் நன்மை அடையும். தர்மார்த்த காம மோட்சத்துக்குரிய நல்ல வழியில் வழிகாட்டிச் செல்லக்கூடிய நல்லறிவோடு கூடிய தலைவர்களையே இன்று நமது சமுகம் தேவைப்படுகின்றது.


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கோடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14


உ

# ஓர் விண்ணப்பம்

மறவன்புலோவிலுள்ள கோயிலாக்கண்டி சிவன் கோயில் அநேக வருடங்களாகக் கிலமடைந்து பூசை முதலிய நியமங்கள் இன்றியிருக்கின்றது. அதன் தர்மகர்த்தாக்கள் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாருக்குச் சாதனமூலம் அக்கோயிலின் பரிபாலனத்தை ஒப்படைத்துவிட்டார்கள். இதன் புனருத்தாரணத்துக்கு ரூ. 8000/= வரை தேவை. ஆகவே சைவச் சீலர்கள் யாவரையும் இச்சிவ கைங்கரியத்துக்குத் தங்களாலியன்ற பணவுதவி புரியுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

த. முத்துச்சாமிப்பிள்ளை,
தலைவர்

முகாந்திரம் இ. பொ. இராசையா,
தனாதிகாரி,

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

ஆ. தனபாலசிங்கம்,
செயலாளர்.

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையாஅவர்களால் 15 2-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.